### உப ஆவணம் II

## இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்களை பதவிகளுக்கு நியமிப்பதற்குரிய கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான புள்ளி - 2024

### 01. சேவை மூப்பு — உச்ச பட்சம் 50 புள்ளிகள்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் *I* இல் சேவைக் காலத்திற்காக தரம் *I* இற்கு பதவி உயர்வு பெற்ற திகதி முதல் புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன் வழங்கப்படும் புள்ளிகளின் பெறுமானம், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இல. *01/2019* இற்கமைய தீர்மானிக்கப்படும். அதாவது அதிக சேவைக் காலத்துடன் கூடிய உத்தியோகத்தருக்கு சேவை அனுபவத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளையும், ஏனைய உத்தியோகத்தர்களுக்கு சமவிகித அடிப்படையில் தரம் *I* இல் சேவைக் காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படும்.

### 02. மேலதிக கல்வித் தகைமைகள்: — உச்ச பட்சம் 12 புள்ளிகள்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கு ஆட்சேர்க்கும் போது தரங்களுக்கான பதவி உயர்வு அல்லது இந்த நேர்முகப் பரீட்சையில் அடிப்படைத் தகைமையாக கருத்தில் கொள்ளப்படும் இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் 3ம் வினைத்திறன்காண் தடை தாண்டலுக்குரிய கல்வித் தகைமைகள் தவிர்த்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகளுள் ஆகக் கூடிய கல்வித் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| *I.* | கலாநிதி *(PhD)* | - 12 புள்ளிகள் |
| *II.* | முதுதத்துவமானி *(M Phil)* | - 10 புள்ளிகள் |
| *III.* | முதுமானி *(MA, MSc, MBA, MEd, MATE.....)* | - 08 புள்ளிகள் |
| *IV.* | பட்டப் பின் கல்வி டிப்ளோமா | - 06 புள்ளிகள் |

இதன் போது முன்வைக்கப்படும் சான்றிதழ்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது பட்டமளிப்பு நிறுவனமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

அத்துடன், விண்ணப்பதாரர்கள் அது தொடர்பான ஆவணங்களை உறுதிப்படுத்தி நேர்முகப் பரீட்சையின் போது மாத்திரம் முன்னிலைப்படுத்த வேண்டும். பின்னராக முன்னிலைப்படுத்தப்படும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

### 03. இணைப்பு மொழியில் தேர்ச்சி: — உச்ச பட்சம் 06 புள்ளிகள்

கல்வித் துறைக்குரியதாக வழங்கப்படும் சில தலைப்புக்களிலிருந்து எதேர்ச்சையாக தெரிவு செய்யப்படும் ஒரு தலைப்பின் கீழ் *03* நிமிடங்களை உடைய முன்வைப்பு ஒன்றை ஆங்கில மொழியில் செய்தல் வேண்டும் என்பதுடன் அதற்காக கீழ்வரும் நியதிகளின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| I. | விடய உள்ளடக்கம் | *- 2 புள்ளிகள்* |
| II. | முன்வைக்கும் விதம் | *- 2 புள்ளிகள்* |
| III. | மொழியைக் கையாளுதல் | *- 2 புள்ளிகள்* |

04. **தகவல் தொடர்பாடல் இயலுமை:** **உச்ச பட்சம் 02 புள்ளிகள்**

*6 மாதங்கள் அல்லது 720 மணித்தியாலங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துடன் கூடிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்/ தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக தொடர்ந்துள்ள ஒரு பாடநெறிக்கு*

*மேலும், இதன் போது முன்னிலைப்படுத்தப்படும் சான்றிதழ்களில் அல்லது புள்ளிகளின் விவரங்கள் உள்ளடங்கிய ஆவணத்தில் (Transcript இல்) உரிய பாடநெறிக்குரிய காலம் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரமே புள்ளிகள் வழங்கப்படும்.*

05. **மேலதிக பாடவிதான செயற்பாடுகள் மற்றும் வெற்றிகள்:** **உச்ச பட்சம் 10 புள்ளிகள்**

I. *விளையாட்டு/ நாடகம்/ கலை விழா அல்லது சாரணர்/ மாணவர் படையணி/ எடின்பரோ போன்ற சந்தர்ப்பங்களில் ஆசிரிய பயிலுனர்கள்/ ஆசிரிய மாணவர்களை வழிநடாத்தி பெற்றுக் கொள்ள வெற்றிகளுக்கான கௌரவிப்பு/ பாராட்டுச் சான்றிதழ்கள் அல்லது ஆசிரியர் கல்வித் துறையின் மேம்பாட்டுக்காக செய்த புத்தாக்கங்கள்/ விசேடமான பங்களிப்புக்களுக்காக பெற்றுக் கொண்ட சான்றிதழ்கள்*

*[கல்விச் செயலாளர்/ பிரதம ஆணையாளரால் வழங்கப்பட்ட அல்லது ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றினால் அல்லது அரச சார்புடைய நிறுவனம் ஒன்றினால் அல்லது அரசினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச நிறுவனம் ஒன்றின் பிரதானியால் வழங்கப்பட்ட சான்றிதழ்களுக்கு (இதன் போது உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை முன்வைக்க முடியும் என்பதுடன் நேர்முகப் பரீட்சையின் போது ஏதேனும் நிச்சயமற்ற தன்மை ஏற்படும் பட்சத்தில் உரிய நிறுவனத்தில் அது தொடர்பாக விசாரித்து. வழங்க வேண்டிய புள்ளிகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும்)]*

*ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 04 சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.*

- 08 புள்ளிகள்

II. *கல்விச் செயலாளர் அல்லது திணைக்களப் பிரதானியால் வழங்கப்பட்ட பொது 230 பீ. பாராட்டுக்கள் மற்றும் குறைகூறல் படிவத்திற்கமைய வழங்கப்பட்ட சேவை மதிப்பீடுகள்* - 02 புள்ளிகள்

*(திணைக்களப் பிரதானி எனப்படுபவர் பிரதம ஆணையாளர் (ஆசிரியர் கல்வி) ஆவார்)*

*ஒன்றிற்கு 1 புள்ளி வீதம் ஆகக் கூடியது 2 சேவை மதிப்பீடுகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.*

***(மேலே 05.I இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்காக வழங்கப்படும் சேவை மதிப்பீடுகள் இதன் கீழ் கருத்தில் கொள்ளப்படமாட்டாது)***

06. **ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்:** **உச்ச பட்சம் 15 புள்ளிகள்**

***அ) ஆராய்ச்சி - 05 புள்ளிகள்***

*முதுமானி/ பட்டப் பின் கல்வி டிப்ளோமா ஆகியவற்றிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சிகள்/ ஆய்வுக் கட்டுரைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது என்பதுடன் பிரசித்தமான ஆராய்ச்சிக் கலந்துரையாடல் மாநாடுகளில் (Research Symposium) முன்வைக்கப்பட்ட அல்லது ஆராய்ச்சி சஞ்சிகை ஒன்றில் (Research Journal) பிரசுரிக்கப்பட்ட ஆராய்ச்சி அறிக்கை 01 இற்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும்.*

*I. தனி நபர் ஆராய்ச்சி அறிக்கைகள் – 05 புள்ளிகள்*

*II. குழு ஆராய்ச்சி அறிக்கைகள் - 03 புள்ளிகள்*

*(பிரசித்தமான கலந்துரையாடல் மாநாடு எனப்படுவது ஆராய்ச்சித் துறைக்குரிய ஒரு அறிஞர் மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ள துறைக்குரிய ஒரு அறிஞர் மற்றும் ஆகக் குறைந்தது இரண்டு பதவி நிலை உத்தியோகத்தர்களை கொண்ட மாநாட்டு சபை ஒன்று இதன் போது கருத்தில் கொள்ளப்படும்*

***ஆ) வெளியீடுகள் – 10 புள்ளிகள்***

I. *விடயத் துறையில் வெளியிடப்பட்ட சர்வதேச தர நிர்ணய புத்தக இலக்கம் (ISBN) அல்லது சர்வதேச பருவ சஞ்சிகை இலக்கமொன்றுடன் (ISSN) கூடிய வெளியீடொன்றிற்கு (தனி நபர் எழுத்தாளர் பதிப்புரிமையுடன் புத்தகங்கள் அல்லது சஞ்சிகைகளுக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்குவது தொடர்பில் கருத்தில் கொள்ளப்படும்.*

*ஒன்றிற்கு 04 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 01 இற்கு*

II. *விடயம் சார்ந்ததாக வெளியிடப்பட்ட சர்வதேச தர நிர்ணய இலக்கம் (ISBN) பெற்ற வெளியீடு ஒன்றின் அத்தியாயம் அல்லது எழுத்தாளர் பதிப்புரிமையுடன் கூடியதாக வெளியிடப்பட்ட மத்தியஸ்த ஆய்விதழ்கள் (Refereed Journals) (அத்தியாயம் அல்லது மத்தியஸ்த ஆய்விதலுக்கான தனி நபர் எழுத்தாளர் பதிப்புரிமை இருத்தல் வேண்டும்)*

*ஒன்றிற்கு 02 புள்ளிகள் வீதம் ஆகக் கூடியது 02 இற்கு*

III. *எழுத்தாளர் பதிப்புரிமையுடன் கூடியதாக வெளியிடப்பட்ட சாராம்சங்கள் (Abstracts) அல்லது செய்திப் பத்திரிகை அல்லது சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விடயம் சார் கட்டுரைகள்*

*ஒன்றிற்கு 01 புள்ளி வீதம் ஆகக் கூடியது 02 இற்கு*

07. **நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் மொத்த திறமை:** **உச்ச பட்சம் 05 புள்ளிகள்**

**மொத்தம் 100 புள்ளிகள்**